கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,
ஐயா,

தேதி: 23.01.2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் தக்காளியில் ஒருங்கிணைந்த பயிர்ப்பாதுகாப்பு வயல்விழா

தக்காளியில் பாக்டீரிய வாடல் நோய் மழைக் காலங்களில் அதிக பாதிப்பை உண்டாக்கும் முக்கிய காரணி ஆகும். இதே போன்று நூற்புழு பாதிப்பு தக்காளி உற்பத்தியை பாதிக்கும் முக்கிய காரணி ஆகும். இந்த பாதிப்புகளை ஒருங்கிணைந்த முறையில் மேலாண்மை செய்யும் பொருட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் உலகக் காய்கறிகள் மையம், தைவான் இணைந்து தாவர நல முனைப்பு நிதி உதவியுடன் தக்காளி மற்றும் அவரைப் பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

தக்காளியை நோய் எதிர்ப்புத்திறன் உடைய கத்தரி ரகத்தின் வேர்ப்பகுதியுடன் இணைத்து ஒட்டுக்கட்டுவதன் மூலம் மழைக் காலங்களில் தக்காளியைத் தாக்கும் பூஞ்சாண மற்றும் பாக்டீரியல் நோய்களிலிருந்து பாதுகாக்கும் தொழில்நுட்பத்தினை உலகக் காய்கறிகள் மையம் கண்டறிந்துள்ளது. இத்தொழில்நுட்பம் குறித்த ஆய்வுத்திடல் கோயமுத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டாரத்தில் சட்டக்கால்புதூர் கிராமத்தில், மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வுத்திடலில் பின்பற்றிய தொழில் நுட்பங்கள் மற்ற விவசாயிகளுக்கும் கொண்டு சென்று சேர்க்கும் வகையில் "தக்காளி ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு" வயல் விழா 22.01.2025 அன்று ஆய்வுத்திடலில் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பயிர்ப்பாதுகாப்பு மைய இயக்குநர் முனைவர். மூ. சாந்தி அவர்கள் தலைமையுரையில் புதிய பயிர் பாதுகாப்பு தொழில் நுட்பங்களை விவாசாயிகளிடம் கொண்டு சேர்ப்பதில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் முனைப்புடன் உள்ளது என்றார். மழைக்காலங்களில் பாக்டிரியல் நோய் பாதிப்பை கட்டுப்படுத்தி அதிக விளைச்சல் பெற நோய் எதிர்ப்புத்திறன் உடைய கத்தரி ரகத்தை கொண்டு உருவாக்கப்படும் ஒட்டுத் தக்காளி சிறந்த தொழில்நுட்பம் என்றார்.

ஒட்டு தக்காளியின் நோய் எதிர்ப்புத் திறனைப் பற்றியும் மற்றும் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மையில் உயிர்ப்பூஞ்சாண கொல்லிகளின் உபயோகம் பற்றியும் நோயியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். க. அங்கப்பன் அவர்கள் கூறினார். பூச்சியியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர். மா. முருகன் பேசுகையில் இத்திட்டத்தில் பின்பற்றப்பட்ட ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகளையும் அவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றியும் கூறினார். தாவர உயிர்த்தொழில் நுட்பவியல் விஞ்ஞானி முனைவர். நா. மணிகண்ட பூபதி அவர்கள் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பில் உயிர் தொழில் நுட்பவியலின் பங்களிப்பைப் பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். மேலும் களைச் செடிகளின் மூலம் இந்நோய் எவ்வாறு பரவுகின்றது என்பதையும் அவர் விளக்கினார்.வேளாண் பல்கலைக் கழக பயிற்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் நா. ஆனந்தராஜா அவர்கள் பல்கலைக்கழக இடு பொருட்களை இணையம் வழியாக பெரும் வழிமுறைகளை பற்றி விவசயிகளிடையே விளக்கமளித்தார்.

பூச்சியியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் பா. ச. சண்முகம் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு வயலில் பின்பற்றிய தொழிநுட்பங்களை பற்றி விவசாயிகளிடம் எடுத்துரைத்தார். முனைவர் மு. கார்த்திகேயன் நோயியல் துறை பேராசியர் சாறுண்ணும் பூச்சிகளை கட்டுபடுத்தி வைரஸ் நோய் பாதிப்பை மேலாண்மை செய்யும் வழிமுறைகளை பற்றி கூறினார். கிணத்துக்கடவு தோட்டக்கலை உதவி இயக்குநர் திருமதி. ஜமுனா அவர்கள் தோட்டக்கலை துறை மூலம் விவசயிகளுக்கு செயல்படுத்தபடும் திட்டங்களை பற்றி எடுத்துரைத்தார்.

இத்திட்டத்தைச் செயல்படுத்திய விவசாயி திரு. க. இரத்தினசாமி அவர்கள் தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். சட்டக்கால்புதூர் பகுதியை சார்ந்த திரு. பட்டியப்பன் மற்றும் இளநிலை ஆராய்ச்சியாளர்கள் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்தனர். சட்டக்கால் புதூர் பகுதியைச் சார்ந்த சுமார் 50 விவசாயிகள் பங்கு பெற்று பயன் பெற்றனர்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***